நகராட்சி அலுவலகம்,
பத்மனாபபுரம்,
நாள் :– 19 .02 .2021.

ந.க.எண். 1174 /2020/இ1.

பத்மனாபபுரம் நகராட்சி
குறுகி கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம் பத்மனாபபுரம் நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்2019–2020 மற்றும் 2020–2021 , – ன் கீழ் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 02.03.2021 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவர்கள் 02.03.2021 –ம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று 3.00 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஒப்பந்தப் பெட்டியினுள் சேர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் அந்தந்த வேலைக்குரிய டேவணித் தொகையினை நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி அதற்குரிய ரசீது ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்திடல் வேண்டும். வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை அதற்குரிய தொகையை ரொக்கமாக செலுத்தி 01.03.2021 –ம் தேதி திங்கள்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்பெட்டி 02.03.2021 –ம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நாள் எதிர்பாராத விதமாக விடுமுறை அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த அலுவலக வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)	பொறுப்பு தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை ரூ.	வேலை முடிக்கப் பட வேண்டிய நாட்கள்	தகுதி
1.	2.	3.	4.	5.	6.	7.
அ)	**சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020**					
1.	பத்மனாபபுரம் நகராட்சி – தக்கலை மேட்டுக்கடை பகுதியில் அமைந்துள்ள அரசு முஸ்லீம் துவக்கப்பள்ளியில் 2 வகுப்பறைகள் அடங்கிய கட்டிடம் கட்டுதல் (	12.00	12000/–	6360/–	2 மாதங்கள்	வகுப்பு 4 மற்றும் அதற்கு மேலும்

	கட்டிடத்தின் முன் பகுததியில் திண்ணை வசதி, மேல்மாடிக்கு செல்லும் வகையிலான சாய்வு தளம் , ஒவ்வொரு வகுப்பறைகளிலும் 4 மின் விசிறி மற்றும் 4 மின் குழல் விளக்குகள்)					
ஆ)	**சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021**					
1	பத்மனாபபுரம் நகராட்சி கல்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்டர்லாக் தளம் அமைத்தல்.	1.00	1000/–	380/–	2 வாரங்கள்	வகுப்பு 5 மற்றும் அதற்கு மேலும்
2	பத்மனாபபுரம் நகராட்சி கல்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அனைத்து வகுப்பறைகளுக்கும் ஒலிபெருக்கி வசதிகளுடன் Public Address System அமைத்தல்.	2.00	2000/–	840/–	1வாரங்கள்	வகுப்பு 5 மற்றும் அதற்கு மேலும்
3	பத்மனாபபுரம் நகராட்சி 10வது வார்டு திரு. கபீர் வீட்டருகில் சிறுமின்விசை திட்டம் அமைத்தல்.	3.00	3000/–	840/–	1வாரங்கள்	வகுப்பு 5 மற்றும் அதற்கு மேலும்
4	பத்மனாபபுரம் நகராட்சி கரும்பாறை இசக்கியம்மன் கோவில் அருகே ஆழ்துளை கிணறுடன் சிறுமின்விசை திட்டம் அமைத்தல்.	2.00	2000/–	840/–	2 மாதங்கள்	வகுப்பு 5 மற்றும் அதற்கு மேலும்
5	பத்மனாபபுரம் நகராட்சி சாரோடு பகுதியில் இருந்து கிருஷ்ணபுரம் செல்லும் இணைப்பு சாலையின் குறுக்கே மழைநீர் வடிகால் மடை அமைத்தல்.	3.00	3000/–	840/–	2 மாதங்கள்	வகுப்பு 5 மற்றும் அதற்கு மேலும்

நிபந்தனைகள்

1)01–04–2020–க்கு பின்பு ஒப்பந்தம் புதுப்பிக்காதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2)ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகை ரொக்கமாக செலுத்தி அதற்கான நகல் நமூனாவுடன் இணைக்கப்பட வேண்டும்.

3)ஒப்பந்தப்புள்ளியை எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ ஒப்பந்தப்புள்ளி பெறும் தேதியை மாற்றி அமைக்கவோ ஆணையாளருக்கு முழு அதிகாரமுண்டு.

4)வேலை உத்திரவு கிடைக்கப் பெற்ற 3 தினங்களுக்குள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் தனது சொந்த செலவில் ரூ.20/– முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5)ஒப்பந்தப்புள்ளி ஊர்ஜிதம் நகராட்சி மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டது.

6)ஒப்பந்ததாரர் பணியை ஆரம்பிக்கும் முன்னர் நகராட்சி பொறியாளரை அணுகி விபரம் பெற்று பணியை துவக்க வேண்டும்.

7)தரமான பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அலுவலகம் மூலம் எவ்வித பொருட்களும் வழங்கப்பட மாட்டாது.

8)மூன்று முறை அபராதம் விதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெயர் ஒப்பந்ததாரர் பட்டியலிருந்து நீக்கம் செய்யப்படும்.

9)செய்யப்பட்ட வேலைகள் மீது தணிக்கை தடை ஏதும் ஏற்படுமாயின் அதற்கான இழப்பீடு தொகையினை வேலைக்குரிய டேவணித் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும்.

10)வேலைகளுக்காக செலுத்தப்படும்/பிடித்தம் செய்யப்படும் டேவணித் தொகை அந்த ஆண்டுக்கான தணிக்கை முடித்த பின்னர் தணிக்கை தடை ஏதும் இல்லாத பட்சத்தில் காசோலையாக வழங்கப்படும்.

11)வேலைகளுக்கு செலுத்தப்படும் 1 சதவீதம் டேவணித் தொகை போக மீதம் உள்ள பட்டியல் தொகையிலிருந்து 1 மற்றும் 5 சதவீதம் கூடுதல் டேவணித் தொகை பிடித்தம் செய்யப்படும்.

12)முடிக்கப்பட்ட வேலைகளுக்கான பட்டியல் தொகை செய்யப்பட்டும் பணிகளுக்கு அரசு மானிய தொகையினை விடுவித்த பின்னரே காசோலை வழங்கப்படும்.

13)செய்யப்படும் பணிகளுக்கு பகுதி பட்டியல் தொகை வழங்க இயலாது.

14)வேலைகளுக்கான பட்டியல் தொகையில் 1 சதவீதம் வருமான வரியும், 2 சதவீதம் GST வரியும் 1 சதவீதம் கட்டுமான பணியாளர்களின் நலநிதியும் பிடித்தம் செய்யப்படும்.

15) இதர நிபந்தனைகள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

16)மூன்று நிலைகளில் (பணி துவங்கும் முன்பு, பணி நடைபெறும் போது மற்றும் பணி முடித்த பின்னர் புகைப்படங்கள் எடுத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர்(பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.

பெறுநர்
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்/நிறுவனத்தாரர்கள்
பத்மனாபபுரம் நகராட்சி.

நகல்–
அலுவலக விளம்பர பலகைக்கு,